**இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம் - 2018**

---

## 1.1 அபிப்பிராயம்

இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுளுக்கு ஏற்புடையதான குறிப்புகள், சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளைக் கொண்டமைந்த 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகிறது.

இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தில் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையும் அத் திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுகள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய தரப்புகளதும் பொறுப்புகள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றறை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆவதுடன், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என

முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து நிறுவனத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றன எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை தரநியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்

### 1.6.1 செலுத்தப்பட வேண்டிய பணம்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆண்டில் தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா. 1,103,069 தொகையும் 2016 ஆம் ஆண்டில் இலங்கை பொறியியல் கூட்டுத்தா-பனத்திடம் செலுத்தப்பட வேண்டிய ரூபா. 2,508,385 தொகையும் மீளாய்விற்கான ஆண்டு வரை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | தனியார் நிறுவனம்மூலம் முடிவுறுத்தப்பட வேண்டிய கல்வி மற்றும் கல்விசாரா உத்தியோகபூர்வ வீடமைப்பு கருத்திட்டங்களுக்கு ஏற்புடையதாக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையும் பார்க்க விலை வேறுபடும் தன்மை 15% ஐ விஞ்சி சென்றதன் காரணமாக பெறுகை வழிகாட்டல் பிரகாரம், அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு, அமைச்சின் செயலாளரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டில் உரிய சீராக்கல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | மதிப்பீடு வேறுப்படும் தன்மை 10% இற்கு குறைந்த மட்டத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டதுடன், செலுத்தப்பட வேண்டிய தொகையினை தாமதமின்றி சீராக்குதல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமை.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்ட திட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கான தொடர் | இணங்கியொழுகாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை நிதி ஒழுங்குவிதி 371 (2) (ஆ) மற்றும் 2015 ஆம் ஆண்டு யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (i) சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிமித்தக் கட்டுநிதி முற்பணம் பதவிநிலை அல்லாத அலுவலர்களுக்கு 66 சந்தர்ப்பங்ளில் மொத்தம் ரூபா.1,119,495 தொகை வழங்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகத்தின் பொதுவான கடமை-களின் பொருட்டு நடைமுறை-யல்லாத காரணங்களின்-மீது பதவிநிலை அலுவ-லர்களுக்கு மட்டு-மல்ல பதவிநிலை அல்லாத அலுவல-ர்களுக்கும் முற்பணம் வழங்குதல் சில நேரங்களில் மேற்கொள்ளப்படுகிறது. | நிதி ஒழுங்குவிதி மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| | (ii) நிமித்த கட்டுநிதி பெற்றுக்கொண்ட அலுவலர் ஒருவர் உரிய அலுவல் முடிவடைந்தவுடன், அந்த முற்பணத் தொகையினை தீர்க்கப்படுதல் வேண்டுமா-யினும், 20 | முற்பணம் சீராக்கும்போது ஏதேனும் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வதுடன், முன்னரான ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் முற்பணம் | நிதி ஒழுங்குவிதி மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்டிருந்த மொத்தம் ரூபா. 711,112 தொகையிலான முற்பணத்தினை மீண்டும் தீர்க்கப்படுதல் 11 நாட்கள் தொடக்கம் 42 நாட்களைக் கொண்ட காலப் பகுதி தாமதப்படுத்தப்பட்டிருந்தது. | தீர்க்கப்படுதலில் தாமதம் குறைந்துள்ளது. எதிர்வருங் காலங்களில் இந்த தாமதங்களை மேலும் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (iii) | மொத்தம் ரூபா. 840,500 ஆன 14 முற்பணங்களை 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 10 அந் திகதியிலும் முற்றுமுழுதாக தீர்க்கப்படவில்லை. | எல்லா முற்பணங்-களையும் திசெம்பர் 31 ஆந் திகதியில் தீர்க்கப்-பட்டுள்ளது என்பதை மேலும் அறியத் தருகின்றேன். | நிதி ஒழுங்குவிதி மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (iv) | மதிப்பீடுகளை தயாரிக்காது முற்பணம் வழங்கியமை காரணமாக 06 சந்தர்ப்-பங்களில் பெற்றுக்கொண்ட முற்பணங்களில் 40%இற்கும் 100% இற்கும் இடையிலான தொகை எஞ்சியிருந்ததுடன், அதனை மீண்டும் தீர்க்கப்பட்டிருந்தது. | ஆட்சி சபைகள், ஏனைய துணைக் குழு கூட்டங்கள் மற்றும் நேர்முகப் பரீட்சைகளின் பொருட்டு சில நேரங்களில் உறுப்பி-னர்கள் சமூகமளிக்காமை காரணமாக பெற்றுக்கொண்ட மொத்த முற்பணத் தொகை பயன்படுத்தப்படமாட்டாது. அதேபோன்று சில சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட துணைக் குழு கூட்டங்களுக்கு அண்மித்த திகதியில் இரத்துச் செய்யப்படுவதன் காரணமாக முழுமையான முற்பணத் தொகையினை மீண்டும் தீர்க்கப்பட்டுள்ளது. | சரியான மதிப்பீடுகளின் மீது முற்பணம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2006 பெறுகை வழிகாட்டல் கோவையில் 2.8.1 (அ) பந்தி | (i) பெறுகை குழுவின் கூட்டங்களை நடாத்துகையில் பெறுகை குழு உறுப்பினர்களுக்கு மேலதிகமாக பெறுகை குழுவின் அங்கத்தவரல்லாத மூன்று அலுவலர்களை பங்கேற்கச் செய்திருந்-ததுடன், அதில் ஒருவர் பெறுகை குழுவின் செயலாளராக பணியாற்றியிருந்தார். | வேலை பொறியியலாளர் மற்றும் உதவி பதிவாளரும் மேற்படி தொழில்நுட்பக் குழுவின் உறுப்பினர்களாவதுடன், நிறுவனத்தின் பெறுகை குழுவில் கோரிக்கை பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையில் தெளிவுபடுத்தல்களின் பொருட்டு மட்டும் உரிய சந்தர்ப்பங்களில் அந்த அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர். | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| | | (ii) பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின்படி பெறுகை குழு உறுப்பினர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களாக பணியாற்றுதலாகாது என்பதுடன், அதற்கு முரணாக மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் குழு உறுப்பினர்களாகவும் பணியாற்றியிருந்தனர். | வேலை பொறியியலாளர் மற்றும் உதவி பதிவாளர் ஆகியோர் மேற்படி தொழில்நுட்பக் குழுவின் உறுப்பினர்களாவதுடன், நிறுவனத்தின் பெறுகை குழுவின் வேண்டுகோளு-க்கமைவாக தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையின் தெளிவுபடுத்தல்களுக்கு மட்டும் ஏற்புடையதாகும் சந்தர்ப்பங்களில் அந்த அலுவலர்கள் பங்குபற்றியுள்ளனர். | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்-கான தாபன விதிக் கோவையில் 111 ஆவது அத்தியாயத்தில் 26.1 உப பிரிவு | உயர் கல்வி நிறுவனங்கள்மூலம் வெளியக நிறுவனங்களில் வெளியக விரிவுரையாளர்கள் பெற்றுக்-கொள்வதனை அதைரியப்-படுத்தல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தாலும், இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட 55 விரிவுரையாளர்களுக்கு மேலதிகமாக 42 | இந்த நிலைமை 2018 ஆம் ஆண்டில் முதல் ஆறு மாத காலப் பகுதியில் உயர் எண்ணிக்கையினைக் கொண்டிருந்த போதிலும், விரிவுரையாளர்களின் புதிய ஆட்சேர்ப்புகள் காரணமாக இரண்டாவது ஆறுமாத காலப்பகுதியில் கணிசமான அளவில் குறைந்துள்ளமையை சுட்டிக்காட்டுகின்றேன். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரிதமாக நடவடிக்கை-களை மேற்கொண்டு வெளியக விரிவுரையாளர்-களின் செலவுகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். |

வெளியக
விரிவுரையாளர்களை
சேவையில்
ஈடுபடுத்தியிரு-ந்ததுடன்,
மீளாய்விற்கான ஆண்டில்
ரூபா.4,900,123 தொகை
கொடுப்பனவாக
செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளின் பிரகாரம், மீளாய்விற்கான ஆண்டில் நிதிசார் விளைவு ரூபா. 2,187,367 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா.8,665,039 ஆகும். அதன்படி நிதிசார் விளைவில் ரூபா. 6,477,672 ஐ அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு ரூபா. 5,950,192 தொகையிலான கலப்பு கிடைக்கப்பெறுவனவைகள் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாகியுள்ளது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் செல்நெறிகளின் பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தால் பேணிச் செல்கின்ற வெளியக பாடநெறிகளில் கடந்த ஆண்டில் பெற்றிருந்த வருமானத்திலும் பார்க்க 20.34% ஆன வருமானம் மீளாய்விற்கான ஆண்டில் பெற்றுக்கொண்டிருப்பினும், கடந்த ஆண்டின் செலவுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டின் செலவு 46.75% ஆல் அதிகரித்திருந்தது.

(ஆ) கடந்த ஆண்டில் ரூபா.334,381,456 ஆன முழு மொத்த செலவு மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 397,844,021 வரை 18.97% ஆல் அதிகரித்திருந்ததுடன், வெளியக கருத்திட்டங்களின் செலவு 46.75 % அதிகரித்தல் இந்த செலவு அதிகரிப்பதற்கு பிரதான காரணமாகியுள்ளது.

### 2.3 விகித பகுப்பாய்வு

(அ) நடைமுறை விகிதாசாரம்

மீளாய்விற்கான ஆண்டில் மொத்த நடைடமுறை சொத்துக்கள் ரூபா. 98,913,834 ம், நடைமுறை பொறுப்புகள் ரூபா. 57,944,783 ம் என்ற வகையில் அமைந்திருந்தமையால் நடைமுறை விகிதாசாரம் 1.7 : 1 ஆனதுடன், கடந்த ஆண்டில் அந்த விகிதாசாரம் 1.1 : 1 ஆக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) உடனடி விகிதாசாரம்

மீளாய்விற்கான ஆண்டில் மொத்த திரவத் தன்மையிலான சொத்துக்கள் ரூபா. 91,565,383 ம், நடைமுறை பொறுப்புகள் ரூபா. 57,944,783 ம் என்ற வகையில் உடனடி விகிதாசாரம் 1.58 : 1 ஆகியதுடன், கடந்த ஆண்டில் அந்த விகிதாசாரம் 0.97 : 1 ஆக நிலவியமை அவதானிக்கப்பட்டது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழக சட்டத்தில் 4 (XV) பிரிவுபடி வாடகை மற்றும் குத்தகை அடிப்படையிலேனும், விடுதி வசதிகளை பெற்றுக்கொள்வ-தற்கான வசதிகள் இருந்தபோதிலும், அதனை கவனத்தில் கொள்ளாது பல்கலைக்கழகத்திற்கு உரிய விடுதிகளில் உள்ள இட வசதிகளை மட்டும் கவனத்தில் கொண்டு ஆட்சேர்ப்புச் செய்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. உள்ளக ரீதியாக மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பான தகவல்களின்படி கடந்த ஆண்டிலும் மீளாய்விற்கான ஆண்டிலும் ஆட்சேர்ப்புச் செய்யப்படாத மாணவர்களின் எண்ணிக்கையானது, விண்ணப்பம் செய்த மாணவர்களின் எண்ணிக்கையில் சதவீதமாக ஒழுங்குமுறையில் 51.3% மற்றும் 58.7% ஆக இருந்தது. அதன்படி பல்கலைக்கழகத்தில் உள்ள வளங்களை ஆகக்கூடிய விளைவுத்திறனுடன், கல்வி வழங்க முடியுமானவாறு ஆகக் கூடிய மாணவர்கள் எண்ணிக்கையை ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பாக முகாமைத்துவம் போதியளவில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | தற்போது வாடகை அடிப்படையின்மீது விடுதியினை பெற்றுக்கொள்வதற்கு பத்திரிக்கை அறிவிப்புகள் மற்றும் ஆவணங்களை தயாரித்து திணைக்களத்தின் பெறுகை குழுவின் அனுமதி பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. தகைமைகள் பெறுகின்ற மாணவர்களை ஆகக்கூடியதாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | விடுதிகளின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வளங்களில் ஆகக்கூடிய பயன்களை பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் நடவடிக்கை மேற்கொள்ளு- தல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் கல்வி வலாகத்தில் பொது வசதிகள் கட்டிடத்தில் 25 கிலோவொட் சூரிய சக்தி பெறும் முறைமை தாபிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 3 மில்லியன் ஒதுக்கப்பட்டிருப்பினும், வேலை பொறியியலாளரின் தற்றுணிபுபடி கொள்ளளவு கிலோவொட் 50 ஆதல் வேண்டுமென தீர்மானித்து 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதமாகும்போது 58 கிலோவொட் ஆன முறைமை தாபிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகத்தின் பொது வசதிகள் கட்டிடத்தில் கிலோவொட் 58 DC கொள்ளளவினைக் கொண்ட சூரிய சக்தி பெறும் சாதனம் தாபிக்கப்படினும், அந்த முறைமை 50 கிலோவொட் AC கொள்ளளவினைக் கொண்ட முறைமையாகும். 2018 ஆம் ஆண்டில் மொழி திறன் அபிவிருத்தி கற்கை நிலையத்தில் நிருமாணிப்பு நடவடிக்கைகள் | நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கையில் ஆகக் குறைந்த செலவில் ஆகக்கூடிய வினைத்திறனை பெற்றுக்கொள்-ளும் பொருட்டு செயலாற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்காக சம்பந்தப்பட்ட கம்பெனியிடம் வெட் வரியின்றி ரூபா. 7,827,540 செலுத்தப்பட்டிருந்தது. ஆயினும் இந்த முறைமைமூலம் எதிர்பார்க்கப்பட்ட மின்சார செலவினை குறைத்தக்கொள்ளும் நோக்கத்தை நிறைவேற்றிக்-கொள்ளும் குறிக்கோளுக்குப் பதிலாக 2017 ஆம் ஆண்டின் மின்சார செலவிற்கும் பார்க்க மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 111,509 ஆன மின்சார செலவினை செலவிட நேரிட்டதால் இந்தக் கருத்திட்டம்மூலம் எதிர்பார்க்கப்பட் செயலாற்றுகை தொடர்பில் திருப்தியடைய முடியவில்லை. | ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மின் அலகுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மாதாந்தம் சூரிய சக்தி முறைமைமூலம் 50 கிலோவொட் AC ஆன கொள்ளளவை உற்பத்தி செய்வதுடன், அதற்கு மேலதிகமாக மேற்கொள்கின்ற மின் உற்பத்தி பொருட்டு மின்சார சபைமூலம் நிறுவனத்திடம் ரூபா.65,097 ஐ செலுத்தப்பட்டுள்ளது. | |
| (இ) | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தம் பொருட்டு நிறுத்தி வைத்திருந்த மொத்தம் ரூபா. 993,858 ஆன, நிறுத்தி வைத்தல் பணத் தொகையினை விடுவிப்பதற்கு அல்லது வருமானத்தில் சேர்த்து கொள்வதற்கு மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | ஒப்பந்த நிறுவனங்கள்மூலம் நிறுத்தி வைத்தல் பணத் தொகையினை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் தாமதமாகியுள்ளதால் நிறுத்தி வைத்தல் தொகை உரிய திகதியில் விடுவிக்கவில்லை. | நிறுத்தி வைத்தல் உரிய காலப் பகுதயின் இறுதியில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) | முறையான ஒழுக்காற்று விசாரணையின்றி பல்கலைக்கழகத்தில் 363 ஆவது ஆட்சி சபையின் தீர்மானம்படி 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆந் திகதி சேவையை முடிவுறுத்தியிருந்த சிரேட்ட உதவி பதிவாளர் ஒருவர் தொழில் நியாய சபையின் வழக்கு தொடுத்து இருந்ததுடன், 2016 ஆம் அண்டு ஏப்ரல் 27 ஆந் திகதி அந்த அலுவலரிடம் ரூபா. 1,534,217 செலுத்துவதற்கும், 60 வயது பூர்த்தியாகின்ற திகதியில் அவர் ஓய்வு பெற்றதாக கருதி ஓய்வு பெறச் செய்விக்கும் கடிதம் கையளிப்பறத்கும் இணங்கப்பட்டு வழக்கினை முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. ஆயினும் முடிவுக்கு வரும் சந்தர்ப்பத்தில் அவ்வலுவலர் பொறுப்பிலிருந்த ரூபா. 173,694 ஆன அலுவலக உபகரணங்கள் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படவில்லை. | பல்கலைக்கழக அறிக்கைபடி ஊழியர் சேமலாப நிதியத்தை உரியவாறு கணக்கிடப்பட்டுள்ளதுடன், உரிய கழிப்புகளும் உரியவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஊழியர் சேமலாப நிதியத்தை செலுத்துவதற்கு பல முறை (07 முறை) முயற்சி எடுக்கப்பட்டுள்ளதுடன், பல்வேறு காரணங்களை குறிப்பிடப்பட்டு அதனை ஏற்பதனை நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை ஆட்சி சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. | அலுவலர் ஒருவரின் முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்திய பின்னர் சேவையை முடிவுறுத்து-வதற்கு அல்லது முடிவுறத்தாதிருப்பதற்கு தீர்மானித்தல் வேண்டும். |

## 3.2 தொழில்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்விற்கான ஆண்டில் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு சேவை பொருட்டு ரூபா. 11,048,029 ஐ செலவிடப்பட்டிருப்பினும், சம்பந்தப்பட்ட உடன்படிக்கை பிரகாரம் பீட வளாகத்தில் விடுதி சார்ந்து 11 இடங்களின் பொருட்டு பிரதான பாதுகாப்பு அலுவலரும், 15 கனிஷ்ட பாதுகாப்பு அலுவலர்களும் சேவை மாற்று முறைக்கு அமைவாக ஈடுபடுத்த வேண்டுமாயினும், பீட வளாகத்தில் 11 இடங்களுக்கு 09 பாதுகாப்பு அலுவலர்கள் மட்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | தற்போது இந்த நிலைமை வழிநடாத்துவதற்கு 03 வளாகங்களில் 3 அலுவல-ர்ககள் கிட்டிய மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் எச்சரிக்கைகளுடன்கூடிய அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் வருகை தராத நாட்களின் பொருட்டு உடன்படிக்கைக்கு அமைவாக சம்பளம் குறைக்கப்படும். | உடன்படிக்கை பிரகாரம் சேவை வழங்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) பல்கலைக்கழகத்தின் வெளியக மற்றும் உள்ளக பட்டமளிப்பு வழங்குதல் தொடர்பாக கவனத்தில் கொள்கையில் வெளியக பரீட்சை பிரிவால் கடந்த ஆண்டில் 228 பொதுக் கலைமானி பட்டமளிப்புகளும், 88 பட்டநிலைபின்படிப்பு பட்டமளிப்புகளும் வழங்கியிரு-ந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் அவை ஒழுங்குமுறையில் 72 ம் மற்றும் 51 ம் என்ற வகையில் வீழ்ச்சியடைந்-திருந்தது. கடந்த ஆண்டில் உள்ளக பீட்சை பிரிவால் 89 சாதாரண கலைமானி பட்டமளிப்பு மற்றும் விசேட கலைமானி பட்டமளிப்பு வழங்கியிருந்த போதிலும், மீளாய்விற்கான ஆண்டில் அது 55 ஆக வீழ்ச்சியடைந்திரு-ந்தது. கடந்த 05 ஆண்டு காலப் பகுதியில் உள்ளக படிட்டமளிப்பு வழங்குதல் ஒழுங்குமுறையாக 1,859 மற்றும் 353 ஆகியதால் உள்ளக பட்டமளிப்பின் செயற்றிறன் மட்டம் ஒப்பீட்டு | வெளியக பிரிவால் கடந்த ஆண்டில் 228 சாதாரண கலைமானி பட்டமளிப்புகளும், 78 பட்டநிலை பின்படிப்பு பட்டமளிப்புகளும் வழங்கியிருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் பட்டநிலை பின்படிப்பு பொருட்டு இரண்டு ஆண்டுகளிலான பாடநெறி-களில் கலந்துகொள்வதற்கு மாணவர்களை அதிகளவில் ஊக்குவித்ததன் காரணமாக வருடாந்தம் பட்டமளிப்பு பெற்றுக்கொள்வதில் ஏற்றத்-தாழ்வு காணப்படுகிறது. 2012 ஆம் ஆண்டுக்கு முன்னராக ஆட்சேர்ப்புச் செய்த மாணவர்களை மீள் பரிசோதனையில் தோற்றி பட்டப்படிப்பினை சித்தியடைந்துள்ளனர். 2016 ஆம் ஆண்டில் புதிய மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்துள்ளதுடன், அவர்களின் பெறுபேறுகள் 2019 ஆம் ஆண்டுக்கு முன்னராக வழங்கப்படவுள்ளது. | பல்கலைக்ககழகத்தின் வெளியக மற்றும் உள்ளக பரீட்சை பிரிவுகளின் செயலாற்றுகை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அளவில் குறைந்த மட்டத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2013, 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் சாதாரண கலைமானி வெளியக பட்டப்படிப்பு பொருட்டு மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருபம்படி தற்காலி-கமாக நிறுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2018 ஆம் அண்டில் பட்டதாரிகளின் எண்ணி-க்கை குறைவடைந்துள்ளது. உள்ளக பரீட்சை பிரிவில் 2018 ஆம் ஆண்டில் வருடாந்த அறிக்கை தயாரிக்கும்போது இரண்டாவது ஆறுமாத பரீட்சைகளின் பெறுபேறுகள் வழங்கப்படாதபடியால் 2018 ஆம் ஆண்டில் பட்டதாரிகளின் எண்ணிக்கை 55 என்று குறிப்பிடப்பட்ருந்தது. | |

**3.3 கருத்திட்டங்கள் மற்றும் மூலதன வேலைகளின் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| வெளியக பரீட்சை பிரிவு அமைந்துள்ள கொழும்பு வளாகத்தில் ஐந்து மாடி கட்டிடத்தை நிருமாணிப்பதற்காக ரூபா.307.5 மில்லியன் தொகையும், ஹோமாகம வளாகத்தில் வெளிநாட்டு மணாவர்களின் பொருட்டு விடுதியும் நிருமாணிப்பதற்காக ரூபா.219 மில்லியன் தொகையும் என்ற வகையில் பொறியியலாளர் மதிப்பீடுகளின்மீது, திட்டங்களை வடிவமைத்தல் மற்றும் நிருமாணித்தல் பெறுகை முறையின் கிழ் ஒப்பந்தக்காரர் ஒருவரை தெரிவு செய்வதற்கு தேவையான கேள்வி கடித ஆவணங்களை தயாரிக்கும் பணிக்காக ஒழுங்குமுறையில் ரூபா.548,902 ம், ரூபா.379,334 ம், கடந்த ஆண்டில் ஆலோசனை நிறுவனங்களிடம் செலுத்தியிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் உரிய நிருமாணிப்புகள் ஆரம்பிக்கப்படவில்லை. | 2018 ஆண்டுக்காக திறைசேரி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறாமை காரணமாக இந்த கருத்திட்டம் ஆரம்பிக்க இயலவில்லை. 2019 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதான ஒதுக்கீடுகளை, ஒதுக்கீடு செய்துள்ளதுடன் ஏற்புடையதான பெறுகை நடவடிக்கைகள் இறுதி கட்டத்தில் உள்ளது. | எப்போதும் பெறுகை திட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் பல்கலைக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 212 ஆகியதுடன் அதில் 35 அலுவலர்களுக்கு ஏற்புடையதான பதவிகள் வெற்றிடமாக நிலவியது. | 07 பேராசிரியர் பதவிகளின் பொருட்டு பத்திரிக்கை அறிவிப்புகள்மூலம் விண்ணப்ப-ங்கள் கோரியபோதும், விண்ணப்பங்கள் கிடைக்கப்-பெறாமை காரணமாக ஆட்சேர்ப்புகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. பௌத்த மனோவியல் மற்றும் ஆலோசனை விடயத்திற்கான விரிவுரையாளர் பதவியின் பொருட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதால் அந்த பதவியை நிரப்புவதற்கு இயலாது. கல்விசாரா பதவியணியின் பதவிகள் மற்றும் உதவி நிதி அதிகாரி, சிரேட்ட உதவி பதிவாளர் ஆகிய பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரிதமான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) 2015 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆந் திகதி தொடக்கம் பல்கலைக்கழகத்தின் வெற்றிடமாக நிலவிய நூலகர் பதிவிக்காக சப்த வருடாந்த லீவு பெற்றுக்கொண்டுள்ள ஏனைய பல்கலைக்கழக-மொன்றின் சிரேட்ட உதவி நூலகர் ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்து 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் தொடக்கம் 2018 ஆம் ஆண்டு மார்ச் வரை ரூபா. 674,343 ஆன சம்பளமும் படியும் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் சம்பந்தப்பட்ட பதவி வெற்றிடமாக இருந்தது. | பத்திரிக்கை அறிவிப்புகள் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரியதுடன், அவற்றுக்கிடையில் கிடைக்கப்பெற்றிருந்த விண்ணப்ப-ங்களுக்கிடையில் ஒரு விண்ணப்பத்தாரி மட்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருபம் 921 பிரகாரம் தகைமைகளை பூர்தி செய்திருந்தார். அந்த விண்ணப்படிவத்தில் 2 மற்றும் 3.1 பகுதிகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி நூலகர் பதவிக்கு தேவையான ஆகக் குறைந்த புள்ளிகளை பெற்றுக்கொள்ளவில்லை. | உரிய பதவிகளுக்கு முறையாக ஆட்சேரப்புச் செய்தல் மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிகளும் நள்ளாளுகையும்

### 4.1 வரவு செலவு நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் 05 செலவு விடயங்களில் உண்யைமான செலவினம் ரூபா 110.4 மில்லயின் ஆவதுடன், மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 66.8 மில்லியன்ாக இருந்தமையால் மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உண்யைமான செலவுகளுக்கிடையில் 19% தொடக்கம் 225% இற்கு இடையிலான ஏற்றத்தாழ்வு உள்ளது. | மதிப்பீடுகளை மீண்டும் திருத்தம் செய்யப்பட்டதுடன், சம்பள அதிகரிப்புக்கு போதுமான ஒதுக்கீடு மட்டும் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது. | சரியான எதிர்வு கூறப்பட்டு மதிப்பீடுகளை சரியாக தயாரித்தல் வேண்டும். |

### 4.2 நிலையான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரம் ஒவ்வொரு அராசங்க நிறுவனமும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், மீளாய்விற்கு ஏற்புயைடதான ஆண்டுடில் பல்கலைக்கழகத்தால் தமது விடயவெல்லையின்கீழ் வருகின்ற அலுவல்கள் தொடர்பாக எவ்வாறு நடைமுறைப்படுதல் வேண்டுமென்று அறிந்திருப்பினும், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துக்-கொள்வதற்கு தயாராகும்போது ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த கூட்டிணைப்பு மேற்கொள்ளாதபடியால் இலக்காகக் கொண்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு திட்டமிடுகையிலும் முன்னராக தயார்நிலை செயற்பாடுகளும் மிக மந்தகதியில் நிலவியமை அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு 117 ஆவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு பரிந்துரைகளின்மீது குழுவொன்றை நியமனம் செய்வதற்கு ஏற்புடையதான ஆட்சி சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது பல்கலைக்கழகத்தால் பின்வருமாறு நிலையான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்வ-தற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு-ள்ளது. |